# TNPSC GROUP I / II – PRELIMINARY
# INDIAN POLITY - WORKSHEET

## நெருக்கடிக்கால விதிகள்

## நெருக்கடிக்காலநிலை பற்றிய விதிமுறைகள்

- இந்திய அரசமைப்பில் நெருக்கடிக்கால நிலைக்கான விதிமுறைகள் பகுதி XVIII சரத்து 352 – 360 ல் அடங்கியுள்ளன.

- இந்த விதிமுறைகள் எந்தவொரு நெருக்கடி நிலையையும் சமாளிக்க மத்திய அரசுக்கு உதவுகிறது. நெருக்கடிநிலையின் போது, மாநிலங்கள் மத்திய அரசின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் செல்கிறது.

- நெருக்கடிகால நிலையின் போது நமது கூட்டாட்சி முறை அமைப்பானது **ஒற்றையாட்சி அமைப்பு** முறையாக மாறும் தன்மை கொண்டது.

- நெருக்கடிகால நிலையானது **இந்திய அரசுச்சட்டம், 1935**ல் இருந்து எடுக்கப்பட்டுள்ளது.

- நெருக்கடி நிலையின்போது அடிப்படை உரிமைகளை இடைநீக்கம் செய்யும் முறையானது **ஜெர்மனியின் வெய்மர் அரசியலமைப்பில்** இருந்து எடுக்கப்பட்டுள்ளது.

**நெருக்கடி நிலையின் வகைகள்:**

- போர் அல்லது வெளிநாட்டு ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதக் கிளர்ச்சியிலிருந்து எழும் நெருக்கடி கால நிலை அல்லது **தேசிய நெருக்கடி நிலை (சரத்து 352)**

- மாநிலத்தில் அரசமைப்பு இயந்திரம் இயங்கத் தவறுவதால் எழும் நெருக்கடி நிலை அல்லது **மாநில நெருக்கடி நிலை (சரத்து 356).** இது 'குடியரசுத்தலைவர் ஆட்சி' என்றும் அறியப்படுகிறது. மேலும் 'மாநில

நெருக்கடிநிலை' அல்லது 'அரசியலமைப்பு நெருக்கடிநிலை' என்றும் அழைக்கப்படுகிறது.

- இந்தியாவின் நிதி நிலை அல்லது கடன் நிலைக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய சூழலில் **நிதி நெருக்கடி நிலை (சரத்து 360)**.

| | **தேசிய நெருக்கடி நிலை** | **குடியரசுத் தலைவர் ஆட்சி** | **நிதி நெருக்கடி நிலை** |
|---|---|---|---|
| அவசர நிலை பிரகடனப்படுத்துவதற்கான காரணங்கள் | குடியரசுத் தலைவர் இந்தியா அல்லது இந்தியாவின் ஏதாவது ஒரு பகுதியின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் போது பிரகடனப்படுத்துதல் **வெளிப்புற நிலைபோர் (அ) வெளிநாட்டு ஆக்கிரமிப்பு, உட்புற அவசர நிலை அயுதக்கிளர்ச்சி** | குடியரசுத் தலைவர் மாநில அவசரநிலை (அ) குடியரசுத்தலைவர் ஆட்சியை விதி 356ல் மாநில அரசமைப்பு இயந்திரம் அரசியலமைப்பின் குறிப்பிட்டுள்ள வாறு இயங்கத் தவறும் போது மற்றும் 365ல் மத்திய அரசின் வழிகாட்டுதலின் படி மாநில அரசு செயல் படாத போது பிரகடனப்படுத்துவார். | குடியரசுத்தலைவர் நிதி நிலை நிலைப்புத் தன்மை அல்லது பொருளிருப்பு அச்சுறுத்தப்பட்டிருப்பதான சூழ்நிலையில் பிரகடனப் படுத்துவர் |
| பாராளுமன்ற ஒப்புதல் மற்றும் கால அளவு | நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஒரு மாதத்திற்குள் ஒப்புதல் பெறவேண்டும்<br><br>ஒப்புதல் பெற்ற பிறகு 6 மாதத்திற்கு தொடரும்<br><br>பிறகு ஒவ்வொரு 6 மாதத்திற்கு ஒரு முறையும் நாடாளுமன்ற | நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இரண்டு மாதத்திற்குள் ஒப்புதல் பெறவேண்டும்<br><br>ஒப்புதல் பெற்றபிறகு 6 மாதத்திற்கு தொடரும் பிறகு ஒவ்வொரு 6 மாதத்திற்கு ஒருமுறையும் | நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இரண்டு மாதத்திற்குள் எளிய பெரும்பான்மையுடன் ஒப்புதல் பெற வேண்டும் பிறகு இது திரும்பப் பெறும் வரை தொடரும் |

APOLLO STUDY CENTRE

| | | | |
|---|---|---|---|
| | ஒப்புதல் பெற்று எவ்வளவு ஆண்டுகளுக்கு வேண்டுமானாலும் நீட்டிக்கலாம். | நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெற்று அதிகபட்சம் 3 வருடத்திற்கு நீட்டிக்கலாம் | |
| நெருக்கடி நிலையினை திரும்பப் பெறுதல் | குடியரசுத் தலைவரால் எப்போது வேண்டுமானாலும் பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெறாமல் ரத்து செய்யப்படலாம். கீழவை, நெருக்கடி நிலையின் தொடர்ச்சியை ஏற்க மறுக்கும் தீர்மானத்தை நிறைவேற்றினால், குடியரசுத்தலைவர் நெருக்கடி நிலையை ரத்து செய்ய வேண்டும். | குடியரசுத்தலைவரால் எந்த நேரத்திலும் திரும்பப் பெறப்படலாம் | குடியரசுத்தலைவரால் எந்த நேரத்திலும் திரும்பப் பெறப்படலாம். |
| சட்டத்துறையில் விளைவுகள் | லோக்சபாவின் ஆயுள் காலத்தை அதன் சாதாரண காலத்தினை 5 ஆண்டுகள் விட ஓராண்டிற்கு நீட்டிக்கலாம்<br><br>(ஒரு முறை அனுமதி பெற்றால் 1 வருடம், என எத்தனை வருடத்திற்கு வேண்டுமானாலும் அனுமதி பெற்று நீட்டிக்கலாம்).<br><br>நெருக்கடிநிலை முடிவு பெற்று 6 மாதத்திற்குகள் நீட்டிக்கப்பட்ட லோக்சபா | குடியரசுத்தலைவர் முதலமைச்சரை தலைமையாகக் கொண்ட அமைச்சரவையினை நீக்கம் செய்கிறார். ஆளுநர், குடியரசுத் தலைவரின் பேரில் மாநில நிர்வாகத்தினை நடத்துவார். குடியரசுத்தலைவர் மாநில சட்டமன்ற கீழ் அவையினை கலைக்கலாம் அல்லது தற்காலிகமாக நீக்கலாம். | மாநிலத்தில் பணியாற்றும் அனைவரின் படிகள் மற்றும் சம்பளங்கள் குறைக்கப்படலாம். பண மற்றும் நிதி மசோதா மாநில சட்ட மன்றத்தில் நிறைவேறிய பின்பு குடியரசுத் தலைவரின் பார்வைக்கு அனுப்பப்படலாம். |

APOLLO STUDY CENTRE

| | | | |
|---|---|---|---|
| | செயலிழக்கும் | | |
| அடிப்படை உரிமையில் விளைவுகள் | விதி 358 ன் படி விதி 19ல் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும்.<br><br>விதி 359 படி (விதி 20 மற்றும் 21 தவிர) பிற அடிப்படை உரிமைகளின் அமலாக்கம் (enforcement) நிறுத்தி வைக்கப்படும். | அடிப்படை உரிமைகளில் விளைவுகள் இல்லை குடியரசுத்தலைவரின் ஆட்சியின்போது கூட மாநில உயர்நீதிமன்றத்தின் அரசியலமைப்பு நிலை, அதிகாரங்கள் மற்றும் பணிகளில் எவ்வித மாறுபாடும் இருக்காது. | அடிப்படை உரிமைகள் மீது எந்த விளைவும் இல்லை |
| பிரகடனப்படுத்திய காலங்கள் | 1. அக்டோபர் 1962 சீனா படையெடுப்பு<br><br>2. டிசம்பர் 1971 பாகிஸ்தான் தாக்குதல்<br><br>3. ஜீன் 1975 உள்நாட்டு கலவரங்கள் | முதலில் அமல்படுத்தப்பட்ட மாநிலம், பஞ்சாப் (1951), தமிழ்நாடு (1976, 1980, 1988, 1991) | நிதி நெருக்கடி நிலை இதுவரை அறிவிக்கப்பட வில்லை |
| தொடர்புடைய அரசியலமைப்பு சட்ட திருத்தங்கள் நீதிமன்ற வழக்குகள், மற்றும் குழுக்கள் | 38வது அரசிலமைப்புச் சட்டத்திருத்தம் 1975 ஏற்கனவே அவசர நிலை நடைமுறையில் இருக்கும் போது மீண்டும் பிறப்பிக்க முடியும் | குடியரசுத்தலைவர் ஆட்சி நீதிமன்ற பரீசிலனைக்கு உட்பட்டதல்ல | 38வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 1975 நீதிமன்ற பரிசீலனைக்கு உட்பட்டதல்ல. 44வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம், 1978 நிதி நெருக்கடிநிலை பிரகடனம் நீதித்துறை மறுஆய்வுக்கு உட்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | **42வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 1976**<br>தேசிய நெருக்கடிநிலையினை நாட்டின் குறிப்பிட்ட ஒரு பகுதியில் பிரகடனப்படுத்த குடியரசுத்தலைவர் அனுமதி அளித்தது | **44வது அரசியலமைப்பு திருத்தசசட்டம் 1978**<br>குடியரசுத் தலைவர் ஆட்சியை 1 வருடத்திற்கு மேலாக நீட்டிக்க நாடாளுமன்ற அனுமதி தேவை. | |
| | **44வது அரசியலமைப்பு திருத்தச்சட்டம் 1978**<br>• "உள்நாட்டு கலவரத்திற்கு பதிலாக 'ஆயுத கிளர்ச்சி" என்ற வார்த்தை சேர்ப்பு<br>• குடியரசுத்தலைவர் **கேபினெட் அமைச்சர்களிடம் இருந்து எழுத்தப்பட்ட பரிந்துரையின்** அடிப்படையிலேயே தேசிய நெருக்கடி நிலையினை பிரகடனம் செய்ய வேண்டும். | S.R. **பொம்மை வழக்கு (1994)**<br>• குடியரசுத்தலைவர் ஆட்சி நீதித்துறை பரிசீலனைக்கு உட்பட்டது<br>• மாநிலத்தில் மதச்சார்பற்ற நிலைக்கு எதிராக அரசியல் நிலை ஏற்பட்டாலும் சரத்து 356 கீழ் குடியரசுத் தலைவர் ஆட்சியை நடைமுறைப்படுத்தலாம்.<br>• மாநில அரசு தனது நம்பிக்கையினை சட்டமன்றத்தில் நிரூபிக்க வேண்டும். | |
| | **மினர்வா மில்ஸ் வழக்கு 1980**<br>தேசிய நெருக்கடி நிலை நடைமுறைப் | **சர்க்காரியா குழு 1983**<br>மாநில நெருக்கடி நிலையினை | |

| | | | |
|---|---|---|---|
| | படுத்துதலை நீதிமன்றத்தினால் விசாரிக்க முடியும். | அரிதாக பயன்படுத்த வேண்டும். | |
| | **ஷா குழு 1975** நெருக்கடி நிலையினை விசாரிக்க ஏற்படுத்தப்பட்டது | | |

## சட்டத்தின் ஆட்சி : (Rule of Law / Due Process of Law)

- **"சட்டத்தின் முன் அனைவரும் சமம்"** என்பதே "சட்டத்தின் ஆட்சி" என்ற கருத்தின் ஒரு உறுப்பு என A.V. டைசி (Dicey) என்ற பிரிட்டிஷ் அறிஞர் கூறிகிறார்.
- அதன் மூன்று அங்கங்கள்,

    i. தன்னிச்சையான அதிகாரமற்றது. எந்த ஒருவனும் சட்டத்தை மீறினான் என்பதை தவிர மற்ற காரணங்களுக்காக தண்டிக்க முடியாது.

    ii. **சட்டத்தின் முன் அனைவரும் சமம்**. அனைத்து மக்களும் (ஏழை, பணக்காரன், உயர்ந்தவர், தாழ்ந்தவர், அதிகாரி, சாதாரண மனிதன்) சாதாரண சட்டத்தின் முன் சாதாரண மக்களாக நீதிமன்றங்களால் நடத்தப்படுதல்.
- தனிநபர்களின் உரிமையை முதன்மையாக கொண்டவை, அதாவது அரசியலமைப்பு என்பது நீதிமன்றத்தினால் வரையறுக்கப்பட்டு மற்றும் வலுயுறுத்தப்படுகின்ற, தனிநபர்களின் உரிமைகளின் விளைவே தவிர அரசியலமைப்பு தனிநபர்களின் உரிமைகளுக்கு ஆதாரமாக இருப்பதில்லை.
- உச்சநீதிமன்றம் **விதி 14**இல் உள்ள சட்டத்தின் ஆட்சிக் கோட்டைபாட்டை மேலும் அரசியலமைப்பின் அடிப்படை அம்சம் என கூறியுள்ளது.

**சட்டத்தின் செயல்மிகு தன்மை தொடர்பான சரத்து மற்றும் நீதிமன்ற வழக்குகள்**

**சரத்து 21**

- நடைமுறை சட்டத்தை தவிர ஒரு நபரின் தனி நபர் உரிமையை இழக்க முடியாது. இது குடிமக்கள் மட்டுமின்றி அனைவருக்கும் பொருந்தும்.

**கோபாலன் வழக்கு (1950)**
- சரத்து 21 பற்றி உயர்நீதிமன்றம் குறுகிய விளக்கம் அளித்துள்ளது.
- சரத்து 21 உள்ள பாதுகாப்பானது தன்னிச்சையான நிர்வாக நடவடிக்கைக்கு மட்டுமே பொருந்தும், தன்னிச்சையான சட்ட நடவடிக்கைக்குப் பொருந்தாது.

**மேனகா காந்தி வழக்கு (1978)**

- சட்டமானது நியாயமான காரணமிக்கதாக இருக்கும் பட்சத்தில், ஒரு நபரின் வாழ்வுரிமை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தை சட்டத்தின் மூலம் பறிக்க முடியும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- சட்டத்தின் செயல்மிகு தன்மையானது, **இயற்கை நீதியை** அடிப்படையாகக் கொண்டது